**செய்தி வெளியீடு எண்:139** **நாள்:19.02.2021**

**செய்தி வெளியீடு**

உலகத் தாய்மொழி நாள் யுனஸ்கோ நிறுவனத்தால் 1999—ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21—ஆம் நாளை உலகத் தாய்மொழி நாள் என அறிவிக்கப்பட்டு, அதற்கிணங்க உலகெங்கிலும் தாய்மொழி நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில், உலகின் மூத்த மொழியாகிய நம் தமிழ்மொழியைப் போற்றிடும் வகையில் உலகத் தாய்மொழி நாளான பிப்ரவரி 21—ஆம் நாளன்று, தமிழ் மொழியின் சிறப்பை இனிவரும் இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டும் எனும் உயரிய நோக்கில் மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் அம்மா அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2013—2014 ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் போது 'உலகத் தாய்மொழி நாள்' பிப்ரவரி 21—ஆம் நாள் ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் கவியரங்கம், கருத்தரங்கம் நடத்திக் கொண்டாட அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கிணங்க 2014ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் உலகத் தாய்மொழி நாள் விழா தமிழ் வளர்ச்சித் துறையால் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் எதிர்வரும் 21.02.2021 ஆம் நாளன்று உலகத் தாய்மொழி நாள் விழா கொண்டாடப்பட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**